**நாமக்கல் மாவட்ட காவல்துறை**

**பத்திரிக்கை செய்தி - 01.05.2024**

தற்போது பரவலாக நடைபெற்றுவரும் சைபர் குற்றங்களை பொதுமக்கள் அடையாளம் கண்டு விழிப்புணர்வுடன் தவிர்ப்பது - சம்மந்தமாக.

**பொதுமக்கள் கவனத்திற்கு ...**

**உதவித் தொகை மோசடி (Scholarship Fraud):**

உங்களை செல்போனில் தொடர்பு கொண்டு கல்வி துறையில் (Education Department) இருந்து பேசுவதாகக் கூறி உங்களுடைய மகன்/மகள் படிக்கும் பள்ளி பெயரை சொல்லி உதவித்தொகை வழங்குவதாக சொல்லி உங்களது வங்கி விவரங்களை கேட்டால் கொடுத்து ஏமாற கூடாது. உங்களது வங்கி கணக்கிற்கு கல்வி உதவித்தொகை பணம் வரும் என்று கூறுவதை நம்பி ஏமாற வேண்டாம்.

**முதலீடு மோசடி (Investment Fraud):**

உங்கள் பகுதியில் உள்ள தெரிந்த நபர்கள் (அ) உங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் பிரபல நிறுவனங்களின் பெயரில் உள்ள போலியான செல்போன் செயலிகளை (Android APP) அறிமுகப்படுத்தி அதில் முதலீடு செய்தால் தினமும் வருமானம் வரும் மற்றும் அதிக லாபம் பெறலாம் எனக் கூறி பணம் முதலீடு செய்ய சொல்லி பரிந்துரை செய்தால் அதை நம்பி பணம் முதலீடு செய்து ஏமாற வேண்டாம்.

**மிரட்டல் கால் மோசடி (Threatening Call Fraud):**

உங்களை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பள்ளி/ கல்லூரியில் படிக்கும் உங்கள் மகன்/மகளை போலீஸ் விசாரணைக்கு அழைத்து செல்வதாகவோ அல்லது கடத்திவிட்டதாகவோ கூறி உடனே பணம் அனுப்ப வேண்டும் என்று கூறினால், உங்களது மகன்/மகளை உடனே தொடர்பு கொண்டு அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். பணம் ஏதும் அனுப்பி ஏமாற வேண்டாம்.

**போலி போதைபொருள் பார்சல் மோசடி(Fake Drug Parcel Fraud):**

செல்போனிலோ (அ) WhatsApp Call மூலமாகவோ உங்களை தொடர்பு கொள்ளும் அடையாளம் தெரியாத நபர்கள் தாங்கள் மும்பை மற்றும் டெல்லி காவல்துறை அதிகாரிகள் என்றோ அல்லது CBI அதிகாரிகள் என்றோ அறிமுகப்படுத்திக் கொண்டு உங்கள் பெயர், ஆதார் எண் மற்றும் செல்போன் எண்ணை பயன்படுத்தி தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் பார்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவோ அல்லது உங்களது வங்கி கணக்கில் முறைகேடாக பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாகவோ கூறி Skype போன்ற Video Call

மூலம் விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி மிரட்டி உங்களுடைய தனிப்பட்ட விவரங்கள் மற்றும் வங்கி கணக்கு விபரங்களை கேட்டால் கொடுத்து ஏமாற கூடாது. பணம் கேட்டு மிரட்டினாலும் கொடுத்து ஏமாற கூடாது. உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளவும்.

பொதுமக்கள் சைபர் க்ரைம் குற்றங்களால் பாதிக்கப்பட்டால் உடனடியாக 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழைக்கவும் அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகாரை பதிவு செய்ய வேண்டும் என நாமக்கல் மாவட்ட **காவல் கண்காணிப்பாளர் திரு. ராஜேஷ்கண்ணன்., IPS** அவர்கள் தெரிவித்து கொண்டுள்ளார்.